அறிவினு ளுகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்ருக் கடை.—(குறள்.)

"From Wisdom's vaunted lore what doth the learner gain
If as his own he guard no other's souls from pain."

# TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

# ஐந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் VIII.] 1908-ஆ. [இலக்கம் 1.

## சென்னை ஜீவஹிம்சை நிவாரண சங்கத்தின் 27 – வது வருஷாந்தக் கொண்டாட்டம்.

இச்சங்கத்தின் 27–ஆவது வருஷத்திய மகோற்சவத்தின் மகா சபை 1908–ஆ மார்ச்சுமீ 31உ மாட்சிமைதங்கிய நமது சென்னைக் கவர்னரின் அனுமதியின்பேரில் அவருடைய அரண்மனையின் சமீபத்திலிருக்கும் பியாங்கு வெட்டிங் ஹால் என வழங்கும் கவர்மெண்ட் கட்டடத்தில் கூடிற்று. முன்னரே அச்சிடப்பட்டு யாவருக்கும் கொடுக்கப்பட்டிருந்த 1907–ஆத்திய அறிக்கைப் பத்திரத்தைக் கனம்பொருந்திய ஹைகோர்ட்டின் பிரதம நீதியதிபராகிய சர் சார்லஸ் ஆர்னால்டு ஒயிட் என்பவரின் பிரேரேபணையின் பிரகாரம் சபையோர்கள் யாவரும் படித்ததாக ஒப்புக்கொண்டார்கள். அவ்வறிக்கையைச் சபையோர்கள் அங்கீகரிக்கவேண்டுமென்று சென்னைக் கிறிஸ்தியன் காலேஜ் புரபெசர் பிட்டென்டிரிக் துரையவர்கள் பிரேரேபித்தபோது பின் வருமாறு உபந்நியவித்தார்:—

"நான் பலவித காரணங்களைக் குறித்தும் இவ்வறிக்கையைச் சபையோர்கள் அங்கீகரிக்கவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன். பூர்வத்தில் ஜனங்களுக்கு இவ்வாருன சங்கதிகளில் சிரத்தை கிடையாது. இச்சங்கத்தின் நிர்வாக சபையின் அக்கிராசனதிபதியாயிருக்கும் கனம்பொருந்திய நீதியதிபராகிய பாடெம் துரையவர்கள், கடந்த அநேக வருஷங்களாக மிகவும் சிரத்தையுடன் பிரயாசைப்படுவதினலேயே முக்கியமாக இப்பொழுது சென்னையிலும் இவ்விராஜதானியிலிருக்கும் சில ஜில்லாக்களிலும் இச்சங்கம் விசேஷ விருத்தியடைந்து அதின் காரியங்களுக்காக அநேக ஜனங்கள் சிரத்தையுடன் பாடுபட்டு வருகிருர்கள். சங்கத்தின் தற்கால க்ஷேமஸ்திதிக்கு, ரென்கான்டர் துரையவர்களின் சிரத்தையும், கஷ்டமும்கூட முக்கிய காரணங்களாகவிருக்கின்றன. அநேகவருஷங்களுக்கு முன் ஒருதடவை இவ்வாருன மகாசபை கூடினபொழுது ஏழுபேர்களே விஜயம் செய்திருந்தார்கள். இப்பொழுது சபையில் நூற்றுக்கணக்காகக் கூடியிருப்பவர்களைப் பார்க்க மிகவும் சந்தோஷமாகவிருக்கிறது. இத்தனை பேர்களில் இச்சங்கத்தின் உத்தேசங்களில் கலந்தவைகளை அங்கீகரிக்காதவர்கள் ஒருவராகிலுமிருக்கமாட்டார்களென்றுநான் நம்புகிறேன். பல தேசத்தின் பல மதஸ்தர்களாகிய இந்துக்களும், மகமதியர்களும்,

கிறிஸ்தவர்களும், ஜைனர்களும், பாரசீகர்களும் மற்று மநேகரும் ஒரே மேடையின் பேரில் ஒரே உத்தேசமுள்ளவர்களாகக் கூடி இருப்பது இச்சங்கத்தின் அபிவிருத்திக்கு அறிகுறியாக விருக்கிறது.

இவ்வறிக்கையைக் கவனித்துப் பார்க்கையில் மூன்று அம்சங்கள் முக்கியமானவைகளாகத் தோன்றுகின்றன. சபை விருத்தியடைந்து விஜயநகரம் மகாராஜ குமாரிக சாஹிபாகாரு முதலான அநேகம் தனவந்தர்களின் திரவிய சகாயத்தினால், வியாதியினாலாகிலும், கிழத்தனத்தாலாகிலும், கண் பொட்டையினாலாகிலும், கால் மொண்டியினாலாகிலும் வேலைசெய்ய சக்தியில்லாத ஜந்துக்களுக்கு ஒரு பஞ்சரபோலென்னும் ஆசிரியமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வாடகை வண்டிகளின் சட்டம் சீர்திருத்தம் செய்யவேண்டிய சில அம்சங்களைச் சங்கத்தார் யோசித்துக் கவர்மெண்டாரின் அங்கீகாரத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். இவ்வாறு தகுந்த சட்டங்களை நிர்ணயிப்பது ஜீவஜந்துக்களின் ஹிம்சையை நிவாரணை செய்வதற்கே யல்லவா? ஜீவ ஹிம்சை நிவாரணத்தின் முக்கியமான அம்சங்களைக் குறித்துப் பல வித்தியார்த்திகளிடமிருந்து வியாசங்கள் வரவழைத்து அவைகளைச் சோதித்து அவைகளில் மேலான வியாசங்கள் எழுதின இருவருக்கு கீர்த்திப் பதக்கங்கள் வெகுமதியளித்தார்கள். இப்பொழுதே இவ்வளவு விருத்தியடைந்திருக்கும் இச்சங்கத்தின் காரியங்கள் இனிப் போகப் போக மிகவும் விருத்தியடையுமென்பதற்குச் சந்தேகமில்லை."

இப்பிரசங்கமானவுடனே, இச்சங்கத்தில் இவ்வருஷம் அலுவல் பார்க்கவேண்டிய நிர்வாகர்கள் ஏற்பாடு செய்யப்பட்டார்கள். அதன்பிறகு ஸ்மித் துரையவர்கள், பாடெம் துரையவர்கள் இங்கிலாந்துக்குப் போய் விடுவதனால் அவருக்கு இனிமேல் இச்சங்கத்திற்குத் தலைவராக விருப்பதற்கு முடியாதென்றும், அவர் இச்சங்கத்தின் விஷயங்களில் மிகப் பிரயாசையெடுத்துக்கொண்டு வந்தாரென்றும், அவர் அக்கிராசனத்தின் கீழ் இச்சங்கம் அடைந்த மேன்மையானது எச்சங்கமும் அடைந்திராதென்றும், அவருக்குப் பதிலாக, சர் சார்லஸ் ஆர்னல்டு ஒயிட் துரையவர்கள் அக்கிராசனாதிபதியாக விருக்க ஒப்புக்கொண்டதற்குச் சபையோர்கள் மிக்க சந்தோஷமுடையவர்களாக விருக்க வேண்டுமென்றும் சொன்னார்.

பின்பு மாட்சிமைபொருந்திய கவர்னர் துரையவர்கள், சங்கத்தாரால் மேலானதாக அங்கீகரிக்கப்பட்ட இரண்டு வியாசங்களை எழுதி அனுப்பின சென்னைக் கிறிஸ்தியன் காலேஜின் மாணவராகிய வி. எஸ். சந்திரசேகர ஐயருக்கு ஒரு பொன் பதக்கமும், எரணாகுளம் காலேஜ் மாணவராகிய டி. எஸ். ரங்கனாதனுக்கு ஒரு வெள்ளிப்பதக்கமும் வெகுமதிகளாக வளித்து, கவர்னரவர்கள் பின் வருமாறு சபையைப் பார்த்து உபந்நியஸித்தார்கள்:—

"இரண்டு வருஷங்களுக்குமுன் முதல் முதல் நான் சென்னைக்கு வந்து இச்சங்கத்தின் வருஷோற்சவ சபை கூடினபோது நான் அக்கிராசனாதிபதியாக விருந்து காரியங்களை நடத்தினேன். அப்பொழுது பாடெம் துரையவர்கள் என்னுடைய உத்தியோககாலம் முடிவதற்குமுன் ஒரு பஞ்சரபோலென்னும் ஜந்துக்களின் ஆசிரியம் சென்னையில் ஏற்படுத்தவேண்டுமென்று அவருடைய எண்ணத்தைத் தெரிவித்தார். அது இப்பொழுது சில வாரங்களுக்கு முன்பே ஒரு மகாராணி அவர்களின் தர்மசிந்தையால் ஏற்படுத்தப்பட்டது. ராஜா வேணுகோபால பஹதூர் அவர்களின் உதாரகுணத்தினால் ஜந்துக்களின் வைத்தியசாலையும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ராஜா கிருஷ்ண பஹதூர் அவர்களால் நாய்களுக்கு ஓர் ஆசிரியமும் கட்டப்பட்டிருக்கிறது. இச்சங்கத்தின் முதல் இருபது வருஷங்களின் சரித்திரத்தைக்கேட்பதனால், பிரஜைகளுக்கு இச்சங்கத்தின் மீதிருந்த அசட்டையை நீக்குவதிலேயே இச்சங்கத்தாரின் காலமும், பிரயாசையும் உபயோகிக்க வேண்டியிருந்ததாகத் தென்படுகிறது. இப்பொழுது கடந்த சில வருஷங்களுக்குள் சங்கத்திற்கு அவ்வாறான கஷ்டம் நீங்கி சங்கத்தின் காரியங்களில் பிரஜைகளுக்கு பிரீதி, விஸ்வாசங்கள் பொருந்தியிருப்பதைப் பார்க்கையில் அதி குதூஹலமாக விருக்கிறது. அக்கிராசனாதிபதியாகிய பாடெம் துரையவர்கள், காரியதரிசியாகிய ரென்கான்டர் துரையவர்கள் ஆகிய இவ்விருவர்களின் விசேஷ பிரயாசையே இவ்வளவு விருத்திக்கு முக்

கிய காரணமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் மற்றவர்கள் கஷ்டப்படவில்லையென்று சொல்லமுடியாது. பாடெம் துரையவர்கள் சீக்கிரத்தில் இங்கிலாந்துக்குப் போய்விடுவோராகையால் இவ்வுயர்ந்த சங்கத்திற்கு அவரை அக்கிராசனாதிபதியாகவிருக்க நாம் பார்ப்பது இதுதான் கடைசி வருஷமென்று நமக்கெல்லோருக்கும் வியாகுலமாகவிருக்கிறது. இப்பத்து வருஷங்களாக அவர் அக்கிராசனாதிபதியாகவிருந்து இச்சங்கத்தை மிகவும் விருத்தி செய்தது யாவருக்கும் தெரிந்தவிஷயமே. அவருடைய ஞாபகார்த்தமாக ஏதாவது செய்யவேண்டியது முக்கியமாக எனக்குத் தோன்றுகிறது. ஆகையால் இச்சபையோருக்கு இதைக்குறித்து ஞாபகம் செய்கிறேன்" என்று கவர்னர் அவர்கள் தம் பிரசங்கத்தை முடித்தார்கள். பாடெம் துரையவர்கள் தாம் இச்சங்கத்திற்கு அக்கிராசனாதிபதியாகவிருந்து கவர்னர் அவர்களை வந்தனம் செய்வது இதுதான் கடைசி தடவையென்றும், அதற்காகத் தாம் மிகவும் சிந்திப்பதாகவும், இச்சபை தம்மைப் பார்க்கிலும் ரென்கான்டர் துரையவர்களாலேயே அதிக விருத்தியடைந்ததென்றும், கஷ்டமெல்லாம் ரென்கான்டர் துரையவர்களுடையதாயிருக்கக் கவுரவத்தைமாத்திரம் தாமடைந்துவந்ததாகவும் சொன்னார்.

கடைசியில் ஏ. வி. பார்த்தசாரதி நாயுடு அவர்கள் பாடெம் துரையவர்கள் சங்கவிஷயமாகச் செய்த நல்ல வேலைகளுக்காக நமக்கு அவருடைய ஞாபகார்த்தமாக அவர் உருவச்சிலையொன்று பஞ்சரபோலின் சமீபத்திலாகிலும், ஜந்துக்களின் வைத்தியசாலையின் சமீபத்திலாகிலும் நாட்டவேண்டுமென்று சொல்லி முடித்தார். பின்னர் சபையின் காரியங்கள் ஏகோபித்த வந்தனங்களுடன் முடிவுற்றன.

## மாலுமியும் பக்ஷிகளும்.

அநேக வருஷங்களுக்குமுன் பிரான்சுக்கும், இங்கிலாந்துக்கும் யுத்தம் நடந்துவந்தபோது இருபக்கங்களிலும் போர்வீரர்கள், மாலுமிகள் முதலானவர்களைக் கைதிசெய்து வந்தார்கள். இங்கிலாந்து தேசத்து மாலுமியொருவன் பிரென்சுக்காரரின் சிறையில் அநேக வருஷங்கள் அடைக்கப்பட்டிருந்தான். அவன் தன் தேசத்திற்குத் திரும்பி வந்தபிற்பாடு ஒருநாள் தெம்ஸ் நதியை கடக்கக் கட்டியிருக்கும் ஒரு வாராவதியின்மீது போய்க்கொண்டிருக்கும்போது பக்ஷிகளை விற்பவனொருவனைப் பார்த்தான். அந்த மாலுமிதான் அநேக வருஷங்கள் சிறையிலிருந்து பட்ட கஷ்டங்களை நினைத்துக்கொண்டு இச்சிறிய ஜந்துக்கள் இப்படி மூடப்பட்டிருப்பதைப் பார்த்துச் சகியாமல் அப்பக்ஷிகள் அடைக்கப்பட்டிருந்த கூட்டுடன் அவைகளை விலைகொடுத்து வாங்கினான். அவன் வாங்கின பக்ஷிகளை வீட்டுக்குக் கொண்டுபோகாமல் கூண்டைத் திறந்து பக்ஷிகளை ஒவ்வொன்றாக வெளியே பறக்க விட்டுவிட்டான். பக்ஷிகளை விற்பவன் மிகவும் ஆச்சரியப்பட்டு மாலுமி செய்தது பைத்தியக்கார வேலையென்று அவனை தூஷிக்க அவன் நகைத்து "நானிருந்த காலம்வரை நீயும் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தால், நீயும் என்னைப்போல் பக்ஷிகளை பறக்கவிட்டு விட்டிருப்பாய்" என்று சொன்னான். அம்மாலுமி போய்க்கொண்டிருக்கும்போது வாலிபர் இருவர் இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்து அவன் செய்த வேலையைக்கண்டு மெச்சி அவனுக்கு வந்தனம் செய்தார்கள். அவனும் அவர்களுக்குப் பதில் வந்தனம் செய்தபின் அவர்களெல்லோரும் தங்கள் தங்கள் வழியில் சென்றார்கள். மாலுமி பக்ஷிகளுக்குச்செய்த உபகாரத்தைப் புகழ்ந்துகொண்டு தேசமெங்கும் அப்பாலர்கள் இக்கதையைப் பரவச் செய்தார்கள்.

## ஓங்கோலில் நடந்த கால்நடைகளின் காட்சி.

சென்னை ராஜதானியின் குண்டூர் ஜில்லாவில் ஓங்கோலென்னும் பட்டணத்தில் அநேக விதங்களான கால்நடைகளைக் காண்பிக்கும்பொருட்டுச் சென்ற மூன்று வருஷங்களைப்போலவே இவ்வருஷமும் மார்ச்சுமீ 15உ முதல் மூன்று தினங்கள்வரை ஒரு காட்சி நடந்தேறிற்று. அவ்வாறு கால்நடைக் காட்சிகள் ஏற்பாடு செய்வதினால் என்ன பிரயோஜன மிருக்கிறதென்று எண்

ணுவீர்களாகில், பார்வைக்கு அழகாயும் பருத்துமிருக்கும் பசு ஜாதிகளுக்கு நல்ல வெகுமதிகள் கொடுப்பார்கள். இவ்விதம் செய்தாலாவது வாயில்லா ஜீவன்களை ஜனங்கள் சரியாய்ப் போஷிப்பார்களென்னும் அபிப்பிராயத்துடன் வருஷ மொரு சந்தை வைக்கிறார்கள். சாதாரணமாக எருதுகள் முதலான வாயில்லா ஜீவஜந்துக்களுக்கு வயிறு நிரம்ப ஆகாரம் கொடுக்காமல் அதிக வேலைமாத்திரம் வாங்கிக் கொள்வதனால் அவைகளுக்குக் கஷ்டம் கொடுக்கிறார்களென்றும், அவ்வாறு அவைகளைக் கஷ்டப்படுத்துவதனால் அந்த ஜாதி வரவர அபிவிருத்தியடையாமல் நசித்துப் போகிறதென்றும் அநேகர்களின் அபிப்பிராயம். அவைகளின் விருத்தியின்பொருட்டு அநேகர்கள் அநேக விதங்களாகப் பாடுபடுகிறார்கள். மேற்சொன்ன இந்த ஒங்கோலின் சந்தைக்கு அடுத்த கிராமங்களிலிருக்கும் உயர்ந்த உத்தியோகஸ்தர்களும், ஜமீன்தார்களும், பிளீடர்களும், அவரவர்கள் சக்தியளவு சிலர் சரீர கஷ்டத்துடனும், இன்னும் சிலர் திரவியத்துடனும் சகாயம் செய்து இதை ஏற்பாடு செய்தார்கள். சென்னையில் பிரசித்திபெற்ற நியாயவாதியாகிய இராய்பஹதூர் பி. அனந்தாச்சார்லு அச்சந்தையை ஆரம்பிக்கும்பொழுது அக்கிராசனாதிபதியாகவிருந்து, இப்பசு ஜாதிகளின் உபயோகங்களைக் குறித்தும் நாம் அவைகளினிடத்தில் காட்டவேண்டிய பிரியத்தைக்குறித்தும் அவர் தம் அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். அவர் சொல்லிய விஷயங்களின் சில முக்கியமான அம்ஸங்கள் கீழ் குறிக்கப்பட்டிருக்கின்றன.

"எருதுகளும், பசுக்களும் உலகத்தில் யாவருக்கும் மிகவும் உபயோகமான ஜந்துக்கள். இத்தேசத்தில் சில விடங்களில் எருமைக்கடாக்கள் தவிர விவசாயத் தொழில்களுக்கு எருதுகள் உபயோகப்படுவதைப் போல் வேறு எந்த ஜந்துக்களும் உபயோகப்படமாட்டா. உழுவதற்கும், கவலையோட்டுவதற்கும், வண்டிகளிழுப்பதற்கும் அவைகள் மிகவும் உபயோகப்படுகின்றன. பசுவானது பால், தயிர், நெய் முதலானவைகளைக் கொடுத்து ஜனங்களைக் காப்பாற்றுகிறது. தேசாபி விருத்தியின்பொருட்டுச் சமயங்களில் நல்ல மழையும், மாடுகள் தொகையில் அதிகரித்திருந்து தாருட்டியத்தில் அபிவிருத்தியடைந்திருப்பதும், அதிக பலன்களும் முக்கியாம்சங்களாக விருக்கின்றனவென்று நம் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆலோசித்துப் பார்த்தால் மேற்சொன்ன மூன்று அம்சங்கள் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டிருக்கிறதென்றும் அதில் இரண்டாவது அம்சமே எல்லாவற்றைக் காட்டிலும் முக்கியமான அம்சமென்றும் தெரியவரும். நல்ல மழைகளில்லாத இப்பஞ்சகாலத்தில் எருதுக ளில்லாவிட்டால் விவசாயம் நடவாது. எக்காலத்திலும் நமக்கு மிக்க அவசியமான இவ்வெருதுகளைச் சரியாக நம் குழந்தைகளைப்போல் போஷித்து அவைகளுக்கு உசிதமான ஆகாரங்களைக் கொடுத்துக்கொண்டு அவைகளை அதிக சிரமம் கொடுக்காமல் வாத்சல்யத்துடன் நாம் பாதுகாக்க வேண்டியதென்பது வெளிப்படையாகிறது. மேலும் கோக்கள் நமக்கு முக்கியமான பால், தயிர், நெய் முதலானவைகளைக் கொடுப்பதால் நாம் அதிப்பிரீதி பக்தியுடன் அவைகளைக் காப்பாற்ற வேண்டுமென்பது ஸ்பஷ்டமாகிறது. இப்பேர்ப்பட்ட காரணங்களினால் நாம் வாயில்லா ஜீவஜந்துக்களை மனித ஜாதிகளைப் போல் எண்ணி அவைகளுக்கு தகுதியான உபசாரங்கள் செய்வது மிகவும் அவசியம்."

அராபியா தேசத்தார் எவ்வாறு தங்கள் குதிரைகளின்பேரில் அன்புடையவர்களாக விருக்கிறார்களோ அதைக்காட்டிலும் அதிகமான பக்ஷத்தை ஒங்கோலின் குடியானவர்கள் கோக்களி னிடத்திலும், அவைகளின் கன்றுகளிடத்திலும் முக்கியமாக சேய்ங்கன்றுகளிடத்திலும் உள்ளவர்களாயிருக்கிறார்கள். மேற்சொன்ன சந்தைக்காக சுற்றுப்புறங்களின் கிராமங்களிலிருந்து சுமார் 800 மாடுகளுக்கு அதிகமாகவே அவ்விடத்தில் வந்திருந்தன. சுமார் 4 மணிக்கு இந்த ஜந்துக்களின் காட்சி ஆரம்பிக்கப்பட்டது. அதற்காக அநேக உத்தியோகஸ்தர்கள் சேர்ந்து வெகுமதிகளளித்தார்கள். அவர்கள் ஒவ்வொரு வகுப்பையும் வெவ்வேறாகச் சோதித்துப் பார்த்து தகுதியான வெகுமானங்கள் நியமித்தார்கள். இதுவேயல்லாமல் இவ்வேடிக்கையைப் பார்ப்பதற்காக அநேக குடியானவர்களும், கிராமஸ்தர்களும் வந்திருந்தார்கள். மாடுகளேயல்

லாமல் சில விவசாயப் பலன்களுங்கூட காட்டப்பட்டன. அதில் வட ஜில்லாக்களின் அநேக விதங்களான தானியங்களும், அநேக விதங்களான பஞ்சு தினுசுகளும், கரும்புகளும் காண்பிக்கப்பட்டன.

## தைரியசாலியான பாப்பி என்னும் நாய்.

சில வருஷங்களுக்குமுன் ஒரு சேனாதிபதி தன் மனைவியையும் சிறு குமாரனையும், பாப்பி யென்னும் ஒரு நியூபவுண்டுலாந்து தேசத்து நாயையும் அழைத்துக்கொண்டு மற்றப் பிரயாணிகளுடன் சீனா தேசத்துக்குச் செல்லும் கப்பலின்பேரில் பிரயாணம் செய்துகொண்டிருந்தான். பாப்பி பிரயாணிகளுடன் சந்தோஷமாக விளையாடிக்கொண் டிருந்ததனால் ஒவ்வொருவரும் அதனிடத்திற் பக்ஷமுள்ளவர்களாக விருந்தார்கள். சேனாதிபதியின் குழந்தையும் பாப்பியுடன் விளையாடிக்கொண்டிருக்கும். இவ்வாறிருக்க ஒருநாள் அக்குழந்தையும், நாயும் விளையாடிக்கொண்டிருக்கும்போது கப்பல் ஓர் பக்கமாகச் சாய்ந்தது. கப்பல் சாயவும் குழந்தை சமுத்திரத்தில் நழுகி விழுந்துவிட்டது. இதைப் பார்த்த சேனாதிபதி ஒன்றும் தோன்றாமல் பிரமைகொண்டு மற்றவர்களுடன் ஓர் படகில் குதித்துக் குழந்தையைத் தேட ஆரம்பித்தான். அச்சமயம் மிகவும் இருட்டாக விருந்ததினால் அதிக தூரத்தில் சென்று குழந்தையைத்தேட முடியாமற்போயிற்று. எல்லாரும் குழந்தை கிடைக்க மாட்டாதென்று தீர்மானித்துவிட்டார்கள். இவர்களுடன்கூடக் குதித்த பாப்பிமாத்திரம் தைரியத்தை விடாமல் குழந்தையைத் தேடிக்கொண்டிருந்தது. கடைசியாகப் படகின் இடது பக்கத்தில் ஒரு சப்தம் கேட்டது. அதைக்கண்ட சேனாதிபதி நாயை ஜலத்தினின்றும் சீக்கிரம் வெளியே தூக்குமென்று கூச்சலிட்டான். அதன்பேரில் அப்படகைத் திருப்பி அவ்விடத்தி லிருப்பவர்கள் தங்கள் சக்தியளவு வெளியே யிழுக்க ஆரம்பித்தார்கள். தைரியசாலியான பாப்பி குழந்தையை வாயில் கௌவிக்கொண்டு ஒரு க்ஷணத்தில் வெளியே வந்தது. பிற்பாடு படகைக் கப்பலின் சமீபத்தில் திருப்பிக்கொண்டு போனார்கள். அக்குழந்தையும் சீக்கிரத்தில் சுகமடைந்தது. பெற்றோர்கள் மிகவும் சந்தோஷித்தார்கள். அந்நாயை எல்லோரும் மிகப் பிரியத்துடன் பார்த்துக்கொண்டு வந்தார்கள்.

இது இப்படியிருக்கையில், கடைசியாகச் சேனாதிபதி தான் இறங்கவேண்டிய விடத்தைச் சேர்ந்தவுடனே, தன் மனைவி பிள்ளையுடன் படகி லிறங்கினான். ஆனால் தங்கள் படகு கொஞ்சதூரம் போனபிற்பாடு தான் சைகை செய்யும்வரை அந்நாயை விடவேண்டாமென்று கப்பலின் மாலுமிகளுடன் சேனாதிபதி சொல்லிவிட்டுப் போனான். அந்நாய் தன் எஜமானனுடன் செல்லவேண்டுமென்று மிகப் பிரயாசைப்பட்டும் அதை யவர்கள் விடவில்லை. சேனாதிபதி அதிகதூரம் படகில் சென்று கரையைச் சேர்ந்தபிற்பாடு நாயை விடும்படிச் சைகை காட்டினான். மாலுமிகள் நாயை விட்டுவிடவே அது திடீரென்று சமுத்திரத்தில் குதித்து நீந்த ஆரம்பித்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் நாய் கீச்சென்று பயங்கரமான கூச்சலிட்டு ஜலத்தை விட்டுச் செல்ல கால்களை உதைத்துகொண்டது. அவ்விடத்தி லிருப்பவர்க ளெல்லோரும் அதைப் பார்த்து நாய்க்கு வலிவந்ததாக வெண்ணினார்கள். பிறகு அந்நாயை யொரு சுறாமீன் துரத்திவந்ததாகக் காணப்பட்டது. பாப்பி தன்னைத் துரத்திக்கொண்டு வருகிற சுறாமீன் கடிக்க ஒட்டாமற்படிக்கு வெகுநேரம் ஜலத்தில் தான் அழுத்துப் போகும்வரை அதை ஏமாற்றி வந்தது. சேனாதிபதி அவ்விடத்தி லிருப்பவர்களுக்கு படகை நாயின் சமீபத்தில் திரும்பும்படி உத்தரவிட்டான். அப்பொழுது சுறாவானது நாயின் சமீபமாகத் திரும்பித் தன் பயங்கரமான வாயைத் திறந்தது. அச்சேனாதிபதி எழுந்து உடனே தன் துப்பாக்கியை எடுத்துச் சுறாவைச் சுட்டான். நிமிஷத்தில் நீரெல்லாம் சிகப்பு நிறமாய்விட்டது. சுறாவின் கன்னங்களெல்லாம் துண்டுகளாய் விட்டன. அவ்விடத்தி லிருந்தவர்கள் படகை நா யிருக்கு மிடத்திற்குத் திருப்பிக் கொண்டுபோய் நாயைப் படகி லிழுத்துக் கொண்டார்கள். பாப்பி சுகமாக விருப்பதைக் கண்டு யாவரும் சந்தோஷப்பட்

டார்கள். அந்நாயின் தைரியத்தைப்பற்றியும் கூர்மையான புத்தியைப்பற்றியும் யாவரும் புகழவேண்டியிருந்தது.

## அருட்செல்வம்.

1. அருட் செல்வஞ் செல்வத்துட் செல்வம்
பொருட் செல்வம் பூரியார் கண்ணுமுள.

2. அரு ளில்லார்க் கவ்வுலக மில்லை, பொரு
ளில்லார்க் கிவ்வுலக மில்லா தியாங்கு.

3. அருள் சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை
யிருள்சேர்ந்த வின்னா வுலகம் புகல்.

(திருவள்ளுவநாயனர் குறள்.)

அருளாவது:—தொடர்பு பற்றாமல் இயல்பாக எல்லா உயிர்களின்மேலும் செலுத்துவதாகிய கருணையேயாம். பொருளால் வருஞ் செல்வங்கள் கீழ்மக்களிடத்தும் உண்டாயிருக்கின்றன. ஆதலால் செல்வங்கள் பலவற்றுள்ளும் ஆராய்ந்தெடுக்கப்பட்ட செல்வமாவது நாம் ஜீவராசிகளிடம் செலுத்தும் அருளேயாம். மேலும் பொருளில்லாதவர்க்கு இவ்வுலகத்தின்பம் இல்லாதமைப்போல உயிர்கள்மேல் அருளில்லாதவர்க்கு முத்தியுலகத்தின்பம் கிடைத்தலில்லை. அருளாலுருகுகின்ற நெஞ்சினையுடையவர் இருள் நிறைந்த நரகத்தில் புகுதலில்லை.

## பால்கறக்கும் பசுக்களுக்கு உப்பினால் உண்டாகும் உபயோகம்.

பசுக்களை வைத்துக்கொண்டிருக்கும் குடியானவர்கள், இடையர்கள் முதலானவர்கள் அறிந்து கொள்ளவேண்டிய விஷயமொன்றுண்டு. அதாவது, பசுக்களுக்கு உப்பு கொடுத்து அதனாலுண்டாகும் பிரயோஜனத்தை இவர்க ளறியவேண்டும். மேற்கு தேசத்தில் விஸ்கான்ஸின் என்னும் ஸ்தலத்தில் ஒவ்வொரு வஸ்துவின் குணங்களைப் பரீக்ஷிக்கும் புரபெசர் பியாப்காக் என்னும் பண்டிதர் செய்த சில பரீக்ஷைகளின் விசேஷத்தைப் படிப்பது மிகவும் அவசியமானதாயிருக்கிறது. உப்பில்லா ஆகாரம் கொடுக்கப்படும் பசுக்கள், உப்பை ருசிபார்க்க வேண்டுமென்ற ஆசையுள்ளவைகளாகவிருக்கின்றன. என்றாலும் அப்பேர்ப்பட்ட பசுக்கள் ஆரோக்கியத்திலாகிலும், பார்வைக்காகிலும் இரண்டு மூன்று வாரங்கள்வரை க்ஷீணித்தமாதிரி தென்படாது. ஆனால்கொஞ்சகாலம் உப்பைக் கொடுக்காமல் பாதுகாக்கப்பட்டு வந்த பசுக்கள் கடைசியாக நிர்ஜீவன்களாகுவனவல்லாமல், ரோக பீடிதங்களாகின்றன. உடனே அவைகளுக்கு உப்பைக் கொடுத்தால் அவ்வியாதியிலிருந்தும் அவை சுகப்படுகின்றன. பசுக்களின் ஆகாரங்களில் சாதாரணமாக அவைகளுக்கு ஆரோக்கியமுண்டாக்கும் வஸ்துவாகிய "குளோரயின்" என்பது உப்பு தின்பதால் உண்டாகின்றது. சாதாரணமாக பால் கறக்காத 1,000 பவுன்கள் எடையுள்ள பசுவுக்கு பிரதிதினம் சுமார் $\frac{3}{4}$ அவுன்ஸு உப்பின் குளோரயின் வேண்டியிருக்கிறது. பால் கறக்கும் பசுக்களுக்கு அவைகள் கறக்கும் பாலைக் கொண்டு அதில் எவ்வளவு குளோரயின் இருக்குமோ அவ்வளவு குளோரயின் உண்டாகும்படியான உப்பை நாம் கொடுக்க வேண்டும். ஆகையால் பால் கறக்கும் பசுக்களின் ஆரோக்கியத்திற்காக மற்ற ஆகாரங்களுடன் உப்பைக்கூட கொடுக்கவேண்டியது அவசியமென்று நாம் ஞாபகம்வைக்க வேண்டும்.

## ஒரு பக்ஷியின் அதி அற்புதமான சக்தி.

அமெரிக்காகண்டத்தில் பிளோரிடாவின் தென்கரையோரமாக லிங்காஸ்டர் என்னும் ஒரு அமெரிக்கர் ஐந்து வருஷங்களாகப் பட்சிகளின் நுட்பங்களை அறிவதற்காகத் தங்கியிருந்தனர். இவர் அநேக இடங்களில் விசாரித்துத் தம்மாலானவரையில் பக்ஷி ஜாதியைக்குறித்து அறிந்துகொள்ள விரும்பியும், அந்தந்த இடங்களில் ஏதேனும் ஒரு குறைவு இருந்துகொண்டே தமது விருப்பத்தைப் பங்கப்படுத்தியதை யுணர்ந்து, கடைசியாகப் பிளோரிடா என்ற மாகாணத்திற்கு வந்து சேர்ந்து, அதன் மேற்கரையில் தங்கினார். அங்கு ஜனக்கூட்டம் அதிகமில்லை; வெட்டவெளி அதிகமாய் இருக்கின்றது. இந்த லிங்காஸ்டர் புகைக்கூண்டேறு

வதில் வலியர். ஆகவே ஐந்து வருஷகாலம் அம்மாகாணத்து மேற்கரையில் தங்கிப் பட்சிகளைக் கவனித்துவந்தனர். ஆகாயத்திற் பறக்கும் பறவை (Frigate Bird) அங்கு காணப்படுகின்றது. இப்பறவை பூமியிலிறங்காமல் சிற்சில சமயங்களில் ஒரு வாரம்வரை ஆகாயத்திலேயே வட்டமிட்டுக்கொண்டிருக்கும்; அப்படியிருந்தால் ஒரு வாரம்வரை அதற்கு ஆகாரம் எங்கிருந்து வருமென்றாலோ அவ்வப்போழ்து அது தன் இறகுகளிலேயே சேகரித்துக்கொள்ளுமாம்; பறந்துகொண்டே இறகின் ஓர் பாரிசமாய்த் தலை வைத்துத் தங்குவதுடன் ஒருதரம் இறகுகளை ஆட்டினால் பின்னர் வெகுதூரம்வரை அவைகளை ஆட்டாமற் செல்லுமாம். சில வேளைகளில் மணி ஒன்றுக்கு 90 மைல் பறக்குமாம். மிஸ்டர் லிங்காஸ்டர் இப்பட்சியைப் பார்த்து, இறகுகளில் ஆகாராதிகளை அது சேகரித்துக்கொள்ளுவதை அறிந்து, தமது புகைக்கூண்டேறி அது இரவு பகலாய் உட்காராமல் பறந்துகொண்டே யிருந்ததையும், மணியொன்றுக்கு 90 மைல் போவதையும் அவர் எவ்விதமறிந்து குறிப்பிட்டாரோ? அவர் அவைகளை அவ்வளவு நுட்பமாய்க் கண்டறிந்தது ஆச்சரியமே.

## ஒரு குதிரை வைத்தியர் அனுபவம்.

அமெரிக்கா கண்டத்தில் ஐக்கிய மாகாணங்களென்னும் தேசத்தில் இப்பொழுது மிக்க சிறப்படைந்து தனவந்தராயிருக்கும் ஒரு குதிரை வைத்தியர் தம்முடைய வித்தியாப்பியாசம் முடிந்ததும் தொழிலில் பிரவேசித்த சில தினங்களுக்குள் தமக்கு நேரிட்ட அனுபவத்தை அடியில் வருமாறு சொல்லியிருக்கிறார்:—

"அநேக வருஷங்களுக்குமுன் நான் குடியிருக்கும் பட்டணத்துக்கு இருபது மைல் தூரமுள்ள ஓர் கிராமத்திலிருந்து அவசரமான தந்தி சமாசார மொன்று எனக்கு வந்தது. அன்று சாயங்கால ரயிலிலேறிப் போய் என்னை வரவழைத்தவரைத் தேடிக் கண்டுகொண்டேன். அவர், இதற்குமுன் நான் சிறிதேனு மறியாத ஓர் சில்லறைக் கடைக்காரரா யிருந்தார். என்னை வரவழைத்த காரணத்தை நானவரைக் கேட்க, அவர், "இன்று காலை என்னிடம் வந்திருந்த என் சிநேகித ரொருவர் அவருடைய குதிரைக்கு ஆபத்தாயிருப்பதாய்ச் சொல்லி, உம்மை வரவழைக்கச் சொன்னார்" என்று சொன்னார். அவ்வூருக்கு இன்னு மிருபது மைல் தூரத்தில் குடியிருக்கும் அச்சிநேகிதன் பெயர், அடையாள முதலியவற்றைத் தெரிந்துகொண்டு நான் அவ்விரவிலேயே போஜனமும் பண்ணாமல் மழை பெய்துகொண்டிருந்தும் சத்த வண்டியில் புறப்பட்டு விட்டேன். அவ்வண்டிக்காரனும் நானும் என்னை வேண்டின குடித்தனக்காரன் கிராமம் சேர்ந்தோம். நான் அவன் வீட்டைத் தேடிக்கொண்டு ஒரு வீதியில் போய்க்கொண்டிருக்க ஓர் குடிசையின் கதவைத் திறந்துகொண்டு கிழவி யொருத்தி வெளியில் வந்து "நீர்தானா குதிரை வைத்தியர்" என்று என்னைக் கேட்டாள். என் பிரயாணம் முடிந்ததென்னும் சந்தோஷ மொருபக்க மிருக்க, சன்மானம் விசேஷமாய்க் கிடைக்குமென்றுனந்தித்துக்கொண்டு "ஆம், ஆம், நான் தான், உங்கள் குதிரைக்கு என்ன ஆபத்து" என்றேன். அவ்வீட்டு எஜமானன் இதற்குள் எழுந்துவந்து என்னை யுபசரித்து உட்கார வைத்தார். சிறுபெண் ணொருத்தி அவசரமாயோடிப்போய் அசௌக்கியமாயிருந்த குதிரைக் குட்டியைப் பிடித்து வந்தாள். அதை நான் கண்டபோது அது பத்து வராகன் கூடப் பெறாத அசங்கியமான மட்டக் குதிரையென்றும், அதன் கழுத்தில் ஓர் கத்தி வெட்டுக்காய மிருப்பதும், ஒரு பைசா தார் வாங்கித் தினம் தடவிக்கொண்டு வந்தால் அக்காயம் ஒரு வாரத்தில் முழுமையும் ஆறிப்போமென்றும் அறிந்தேன். இதையறிந்தபோது நான் 100 ரூபாயாவது கிடைக்குமென்று எண்ணியிருந்த சந்தோஷ மெல்லா மிழந்தவனானேன். குடியானவனுக்கு சிகிச்சை முறை தெரிவித்துவிட்டு மறுபடி என் வண்டியேறத் திரும்பினேன். அப்பொழுது குடியானவன் தன் வீட்டில் பல ரகசியமான இடங்களில் தேடிப்பார்த்து அதிகமாய்ச் செம்பு நாணயங்கள் கலந்திருந்த மொத்தமாகிய ரூபா 5 கொண்டுவந்துகொடுத்தார். அதிக வியசனத்துடன் திரும்பிப் போய் என் வீடு சேர்ந்தேன்."

எந்தத் தொழிலாவது ஆரம்பிக்கிறவர்கள் துவக்கத்தி லுண்டாகும் கஷ்டங்களுக்கு அஞ்சி அதைரியப்படக்கூடாது. ஊக்கமும் விடாமுயற்சியு மிருந்தா லெதையும் ஜெயிக்கலாமென்பது நிச்சயம்.

## சமாசாரக் குறிப்புகள்.

ஜீ. ஹி. நி. காகிநாடா கிளைச்சங்கத்தின் வருஷாந்தர மஹோற்சவம் அந்த ஜில்லா கலெக்டராகிய கார்டன் துரையவர்களின் அக்கிராசனத்தின்கீழ் சென்ற மார்ச்சுமீ 28உ யன்று கொண்டாடப்பட்டது. அப்பொழுது நடந்த இதர கிரியைகளில் வாயில்லா ஜந்துக்களுக்காக ஒரு வைத்திய சாலையை அப்பட்டணத்திலேயும் ஏற்படுத்த வேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

திருவாங்கூர் மஹாராஜா அவர்களின் இராஜ்ஜியத்தில் கோட்டயமென்னும் பட்டணத்தில் சென்ற மார்ச்சுமீ 21உமுதல் மூன்று தினங்களும் கால் நடைகளின் காட்சி மிக விமரிசையாக நடத்தப்பட்டது.

இந்த ஏப்பிரல்மீ 4, 5, 6உகளில் கால் நடைகள், பயிர்த்தொழிலுக் குபயோகப்படும் கருவிகள், தானியங்கள் முதலானவற்றின் காட்சியொன்று எல்லூரில் நடைபெற்றது. கிருஷ்ணா ஜில்லா கலெக்டராகிய மாரிஸ் துரையவர்கள் அக்கிராசனதிபதியாயிருந்து அக்காட்சியை ஆரம்பித்து நடத்தினார்கள்.

அதிகமாகப் பால்கொடுக்கும் பசுக்கள் மெல்லிய கழுத்தும், உயர்ந்த பின்பாகமும், மெல்லிய கால்களும், மயிர்க்குச்சுள்ள நீண்ட வாலும் உடையவைகளாயிருக்கும். மேலும் சாதுத்தன்மை, அழகிய நடை, மிக்க மேய்ப்புகொள்வது முதலிய லக்ஷணங்களும் அவைகளிடம் பொருந்தியிருக்கும்.

சாதாரண குதிரைஜாதிக்கு நேரிடும் வியாதிகளைக் கண்டுகொண்டு உடனே அந்தந்த வியாதிகளுக்குத் தக்கபடி சிகிச்சைகள் செய்வது குதிரைகளை வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு மிகவும் அவசியம். குதிரைக்கு வியாதி அதிகரித்து கஷ்டப்படுவதற்குமுன் அதன் வியாதியைக் கண்டுகொள்ள அநேகருக்குத் தெரியாது. சிலர் அப்பேர்ப்பட்ட அனுபவத்தை யுடையவர்களாயிருந்தாலும் உண்டான வியாதியை நிவாரணை செய்வதற்கு மார்க்கம் தெரியாமலிருக்கிறார்கள்.

யானைகளின் தேக சௌக்கியம், வியாதிகள், அவைகளுக்குச் செய்யவேண்டிய சிகிச்சை முதலானவைகளைக் குறித்துப் பர்மா தேசத்தில் வாயில்லா ஜந்துக்களின் சிகிச்சை இலாகாவின் சூப்பரின்டென்டென்டு மேஜர் இவான்ஸ் துரையவர்களால் மிகவும் உபயோககரமான புத்தகமொன்று பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கிறது. அதன் கிரயம் ரூ. 3-8-0.

இங்கிலாந்து தேசத்தில் தகுதியான வைத்தியசாலையில் படித்துப் பரீக்ஷையில் தேறாதவர்கள், வாயில்லா ஜீவ ஜந்துக்களுக்குச் சிகிச்சை செய்யக்கூடாதென்று 1881-ம் வருஷத்தில் ஒரு சட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அப்பேர்ப்பட்டவர்கள் வைத்தியம் செய்தால் அவர்களுக்கு 315 ரூபாய்கள்வரையில் அபராதம் விதிக்கவேண்டுமென்னும் நிபந்தனை அச்சட்டத்தில் சேர்க்கவேண்டுமென்றும் சில புத்திமான்கள் மனுசெய்துகொண்டிருக்கிறார்கள்.

பிரான்சு தேசத்தில் குதிரை இறைச்சியை மிக்க ஆசையுடன் ஜனங்கள் புசிக்கிறார்கள். அத்தேசத்து முக்கிய பட்டணமாகிய பாரிஸிலும், அதன் பேட்டைகளிலும் 1906-ம் வருஷத்தில் குதிரை இறைச்சியை விற்கிற கசாயிக்காரர்கள் 440பேரிருந்தார்கள். மற்ற இறைச்சியைவிட குதிரை இறைச்சி குறைந்த விலைக்கு விற்கிறார்கள். மனிதரின் ஆகாரத்துக்காக 1887-ம் வருஷத்தில் 16,282 குதிரைகளைக் கொன்றிருக்க, 1906-ம் வருஷத்தில் 57,734 குதிரைகளைக் கொன்றார்கள். இதென்ன ஆச்சரியம்!

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1908.

# ஜீவ ஹிம்சை நிவாரண சங்கத்தாருடைய அறிக்கை.

பைபில் பழமொழி 92—வது அத்தியாயம். 10—வது பழமொழி.

1. சன்மார்க்கர்கள் தங்களுடைய மிருகங்களின் உயிரைப் பேணுவார்கள்.

## மனுஸ்மிருதி.

1. கல்வியினுல் அறிவு விருத்தியாயிருக்கிற இருபிறப்பாளர் யாரும் தாங்கள் எவ்வளவு கஷ்டதிசையிலிருந்தாலும் தங்கள் சொந்தவீடு, குருவீடு, காடு இவைகள் எதில் இருந்தாலும் மிருகங்களை வேத சம்மதமில்லாமல் துன்பப்படுத்தமாட்டார்கள்.

2. யாதொரு ஜீவனுக்கும் துன்பஞ்செய்யாதவன் எதை நினைக்கிருனே, எதற்காக முயற்சி செய்கிருனே, எதன்பேரில் தன் மனம் வைக்கிருனே, அதை பிரயாசையில்லாமல் பெறுவான்.

## மஹமது அவர்கள் ஹாதீஸ்.

1. குதிரையை விட்டுக் கீழே யிறங்கும்போது அதன் கொள்ளும் புல்லும் சரியாயிருக்கின்றனவா வென்று பார்க்க வேண்டும். எப்பொழுதாவது அதன் முகத்தில் அடித்தலும் அளவுக்கதிகமாகச் சுமை ஏற்றலும் செய்யக்கூடாது.

2. நீ பிரயாணம் செய்யும்போது உன் சாப்பாட்டுக்கு முன் உன் குதிரையின் புல்லையும், தானியத்தையும் சரிபார்க்க வேண்டும்.

3. ஹஜரத் இமான் ஜைநூல் ஆப்தீன் என்பவர் மக்காவுக்கு ஒரே ஒட்டகத்தின்மேல் இருபதுமுறை போனுர். ஆயினும் அவர் அதை ஒருகாலத்திலும் அடித்ததில்லை.

காலஞ்சென்ற ஜஸ்டிஸ் பாடெம் துரையவர்கள்மீது பாடிய

# இரங்கற்பாக்கள்.

அறுசீராசிரியம்.

ஒன்றுநாம் நினைக்கத் தெய்வ மொன்றினை யெண்ணு மாபோல்
பொன்றல னிகர்த்த சீமை புக்கிச்சின் னுள்க ழித்துப்
பின்றனக் குற்ற தேகத் தளர்ச்சியும் பிறவு மாற்ற
வன்றுநீ போந்தாய் கண்டே னவன்செய லியாதோ வப்பா.

வென்றிகொள் விருதி னேடும் விளங்கினை மண்மேற் சின்னாள்
நன்றிநீ பலவும் செய்தாய் ஞாலத்தி லுள்ளா ரந்தோ
அன்றுனை வேட்டாள் பெற்ற மக்களுங் கலுழ வங்கண்
சென்றது மெங்க னேயோ செம்மனிற் குற்ற தென்னே?

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

சென்னையினில் ரெயிலேறிப் பம்பாய்போய் மாக்கலமே யூர்ந்து செல்ல
வுன்னியநீ சீமையினில் வாழ்மனையும் மக்களுட னுற்றூர் மற்றும்
நின்னரிய நண்பர்களு முனைநிகர்த்த செல்வர்களும் நினக்கப் போது
பின்னிருந்த பரிசனமும் வருந்தவிட் டிடைபிரிந்தென் பெற்று யப்பா!

நோய்பட்ட செந்துக்கள் நினைவிட்டிங் ககன்றதொரு நோக்கத் தாலே
தாய்விட்டுப் பிரிந்ததொரு கன்றினைப்போ லிச்சமயம் தவிப்ப தன்றி
வாய்விட்டுக் கதறியழ விட்டகன்று யவைகள்படு மிம்சை மற்று
மாயுற்ற வருத்தமெலா னிவாரணமாம் வழிக்கென்னே சொல்வா யப்பா.

மனக்கவலை மாற்றவுநீ மண்விட்டுப் போந்தனையோ மற்று மீண்டு
நினக்கமைந்த வலுவலைத்தான் சிறிதெனநீ நினைத்தனையோ நிகரி லாத
தனக்குவியல் வெறுத்தனையோ தாரமொடு தனயரையுந் தவிர்த்தாய் கொல்லோ
வெனக்கொருசொல் சொல்லாதின் றேகினையே யென்றுனைநான் காண்பே னெந்தாய்.

புகன்றதுவும் போனதுவும் புதுமையதா மென்றுனைப்பின் பற்றிப் போந்தோ
ரகன்றதைவந் தறைந்தனர்நீ யெங்கசன்று யென்றுரைக்க வுடையா ரல்லர்
இகலறுசீர் நன்குணத்தா யிப்பாரி னின்பெருமை யென்னே யென்று
புகல்கிற்ப தல்லாதிங் குனைப்பார்க்க வொருகாலம் போந்து மேயோ.

இளையனூர் வேலூர், வே-கு. முத்துமாணிக்க முதலியார்.

கனம்பொருந்திய மேஸ்தர் ஜட்ஜி எச். டி. பாடெம் துரை.

1898 முதல் 1908 வரை ஜீ. ஹி. நி. சங்கத்தின் அக்கிராசனாதிபதி.

**The Late Hon'ble Mr. Justice H. T. Boddam,**

***President, S. P. C. A., 1898 to 1908.***